# மே – 07 – செவ்வாய்

**நானோ, பயனற்ற சிலைகளில் பற்றுடையோரை வெறுத்து, ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன். திபா. 31:6**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 7 : 51 – 8 : 1

அந்நாட்களில் இஸ்தோவான் மக்களையும், மூப்பரையும், மறை நூல் அறிஞரையும் நோக்கிக் கூறியது : திமிர் பிடித்தவர்களே, இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும் ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களே, உங்களுடைய மூதாதையரைப் போல நீங்களும் தூய ஆவியாரை எப்போதும் எதிர்க்கிறீர்கள்.எந்த இறைவாக்கினரைத்தான் உங்கள் மூதாதையர் துன்புறுத்தாமலிருந்தார்கள்? நேர்மையாளருடைய வருகையை முன்னறிவித்தோரையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்போது நீங்கள் இயேசுவைக் காட்டிக்கொடுத்துக் கொன்றுவிட்டீர்கள். கடவுளின் தூதர்கள் வழியாய்த் தரப்பட்ட திருச்சட்டத்தை நீங்கள் பெற்றிருந்தும் அதனைக் கடைப்பிடிக்கவில்லை."இவற்றைக் கேட்டவர்கள் உள்ளம் கொதித்தெழுந்து அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தார்கள்.அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்றுநோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு, "இதோ, வானம் திறந்திருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்" என்று கூறினார்.ஆனால் அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக்கொண்டு பெருங் கூச்சலிட்டு ஒருமிக்க அவர்மேல் பாய்ந்தார்கள். நகரத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு போய் அவர்மேல் கல்லெறிந்தார்கள். சாட்சிகள் தங்கள் மேலுடைகளைச் சவுல் எனும் இளைஞரிடம் ஒப்படைத்தார்கள்.அவர்கள் ஸ்தேவான்மீது கல்லெறிந்தபோது அவர், "ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டார். பின்பு முழந்தாள்படியிட்டு உரத்த குரலில், "ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" என்று சொல்லி உயிர்விட்டார். இஸ்தேவானைக் கொலை செயவதற்குச் சவுலும் உடன்பட்டிருந்தார்.

**பதில்பாடல் :** உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்.

## நற்செய்தி : யோவான் 6 : 30 – 35

அக்காலத்தில் மக்கள் இயேசுவிடம்,"நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் என்ன அரும் அடையாளம் காட்டுகிறீர்? அதற்காக என்ன அரும் செயல் செய்கிறீர்?எங்கள் முன்னோர் பாலை நிலத்தில் மன்னாவை உண்டனரே! "அவர்கள் உண்பதற்கு வானிலிருந்து உணவு அருளினார்" என்று மறைநூலிலும் எழுதப்பட்டுள்ளது அல்லவா!" என்றனர். இயேசு அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல. வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே.கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது" என்றார்.அவர்கள், "ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.இயேசு அவர்களிடம், "வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" என்றார்.

**தியானம்:** நம தாண்டவர் இயேசுவே வானிலிருந்து இறங்கி வந்த உணவு. அந்த உயிருள்ள உணவை நாமுண்டால், நிலைவாழ்வைப் பெறுவோம். வானிலிருந்து இறங்கி வந்த உணவான இயேசுவை நம்பி, அவர்மீது முழுமையான நம்பிக்கை வைத்தால், அவர் எமக்கு அனைத்து நலன்களையும் வழங்குவார் என்பதனை நற்செய்தி (யோவான் 6 :24-35) தெளிவுபடுத்துகிறது. நற்செய்தியை (யோவான் 6:24-35) ஆழமாக உற்று நோக்குவோமாயின், சாதாரண உணவு என்பது உயிரோடு இருப்பதற்கு உதவிசெய்கிறது. இயேசு தரும் உணவு இவ்வுலகிலும் மேலாக விண்ணுலகில் உயிர் வாழ்வதற்கு உதவுகிறது. இதனாலேயே “வாழ்வுதரும் உணவு நானே” என்று இயேசு குறிப்பிடுகிறார். விண்ணுலகில் உயிர் வாழ்வது, உயிரோடு வாழும் கடவுளோடு இணைந்த வாழ்வு எனப்படும். அவ்வாறான பாக்கியம் நிறைந்த வாழ்வு இயேசுவால் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இயேசு இல்லாமல் அந்த வாழ்வைப் பெறமுடியாது. இயேசுதான் அந்த வாழ்வுதரும் உணவு என்பதனை நற்செய்தி (யோவான் 6:24-35) வேறு விதமாகப் படிப்பிக்கின்றது என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். வானிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவான, நமது வாழ்வில் அமைதியைத்தர வல்லவரான இயேசுவை நாம் உண்டால், நிலைவாழ்வைப் பெறுவோம். இயேசுவில் முழுமையான நம்பிக்கை வைத்தால், அனைத்து நலன்களையும் பெற்றுத்தருவார். அவரைப் பற்றிக் கொண்டால், நமது வாழ்வில் கவலை, கண்ணீருக்கு இடமில்லை. இயேசு ஒருவரே நம்மை உயிர் வாழ வைக்கிறார் என்பது வெறும் இருத்தல் அல்ல, அத்தகைய வாழ்வை நமக்குத்தரக்கூடியவர் இயேசு மட்டும்தான். இயேசு நிறைவாழ்வின் உணவை (யோவான் 6:24-35) அறிமுகப்படுத்திப் பேசியபோது, மக்கள் ஆர்வத்துடன் இயேசுவிடம் வைக்கும் கோரிக்கை "ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்" என்பதாகும். அவ்வாறு கேட்ட அன்றைய மக்களின் வேண்டுதலே, நமது அன்றாட செபமாக வேண்டும். ஆண்டவர் இயேசு "எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத் தாரும்" என்று மன்றாட சொல்லித்தந்தார். ஆனால், எந்த உணவுக்காக? கடவுள் தரும் உணவுக்காக நாம் மன்றாடவேண்டும். அவ்வாறு அனுதினமும் மன்றாடுவோமா? அதனையே நமது வேண்டுதலாகவும் மாற்றுவோமா!